**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 35 | of | 2016 |
|---|---|---|---|---|

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா. -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சுரேஷ்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-06.11.2025**

**பி.வா.சா.-2**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ-5, 6 க்கு இடைப்பட்ட காலத்தில் 25 சென்ட் No development zone என்று அடையாளப்படுத்தப்பட்டதை வாதியும் நானும் தெரிந்து கொண்டோம். வா.சா.ஆ-7 அதை தெரிந்து கொள்வதற்குதான் ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.7 ல் surveyed on 15.07.2013 என்று கண்டுள்ளது. வா.சா.ஆ.5,6 க்கு பின்னிட்டு வா.சா.ஆ.7 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் எனவே என்னுடைய கூற்று தவறு என்றும் சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் பத்தி 18 ல் வா.சா-ஆ.6 க்கு பிறகுதான் மொத்த கிரய தொகையை வாதி எனக்கு கொடுத்தார் என்று சொல்லியிருக்கிறேன்

என்றால் சரியல்ல. வா.சா.ஆ-6 ஆவணத்தில் தொகையை பெற்றுக் கொண்ட பிறகு ரசீது கொடுத்தேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரசீது எதுவும் தரவில்லை. பிரமாண வாக்குமூலம் பத்தி 18 ல் வா.சா.ஆ. 6 எழுதப்பட்ட பிறகு நான் அசல் ஆவணங்களை கொடுத்து தாவா சொத்தின் சுவாதீனத்தையும் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளது சரிதான். வா.சா..ஆ 6 ல் சரத்து 7 ல் ஜெராக்ஸ் நகல்கள் மட்டுமே கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. சரத்து 10 ல் வாதிக்கு நான் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றும் வா.சாஆ.6 சரத்துக்கள் தெரியும் என்றும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் சரத்து 3 ல் வாதி அட்வான்ஸ் தொகை ரூ.2 லட்சம் எனக்கு கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது formality க்கு போடப்படுவது ஆகும். சரத்து 4 ல் 90 நாட்களுக்குள் மீதி கிரய தொகை செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுவும் formality க்கு போடப்பட்டதுதான். எனவே வா.சாஆ-6 ல்உள்ள விவரங்கள் தவறானவை என்றால் அதை மறுக்கிறேன். அனைத்துமே formality க்காக போடப்பட்டவை. வா.சா.ஆ-9 அறிவிப்புக்கு எதிராக பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. வா.சா.ஆ.9 பற்றி வாதிக்கு தகவல் கொடுத்தேன். வாதி 1 ம் பிரதிவாதிக்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. வா.சா.ஆ-9 ல் என்ன காரணத்திற்காக பவர்பத்திரம் ரத்து

செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை படித்துப் பார்த்து காரணம் என்ன என்று தெரிந்து கொள்ளவில்லை. பவர் ரத்து ஆவணத்தை நான் நகல் பெற்ற படித்துப் பார்த்தேன். வா.சா.ஆ-8, 9 ல் 1ம் பிரதிவாதியின் உரிமையை மோசடி செய்யும் காரியங்களில் நான் ஈடுபட்டு வந்ததால் பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது உண்மையில்லை. மீரான்குளம் சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்தம் எழுதப்படவில்லை. பொது அதிகார பத்திரம் எழுதப்பட்ட போதே அசல் ஆவணங்களை 1ம்பிரதிவாதி என்னிடம் ஒப்படைத்தார். தாவா சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களை பவர் ஏற்படுத்தும் போது 04.09.2012 அன்று 1ம் பிரதிவாதி என்னிடம் ஒப்படைத்தார். 1ம் பிரதிவாதி பவர் பத்திரம் எழுதும் போது அசல் ஆவணங்களை கொடுப்பது வழக்கம் என்றும், அதே முறையில்தான் தாவா சொத்திற்கான அசல் ஆவணங்களை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பணம் வாங்கிய பிறகுதான் கொடுத்தார். 1ம் பிரதிவாதி எந்த சந்தர்பத்திலும் என்னிடமோ வாதியிடமோ தொகை பெறவில்லை என்றால் சரியல்ல. 04.09.2012 அன்று அசல் ஆவணங்களை நான் வாதியிடம் ஒப்படைத்துவிட்டேன். அவ்வாறு ஒப்படைத்தற்கு எந்த ஆவணமும் என்னிடமோ வாதியிடமோ இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் 19.02.2013 க்கு பிறகுதான் அசல் ஆவணங்களை வாதியிடம் ஒப்படைத்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக கொடுத்த புகார் போலீசாரால் பதிவு செய்யப்பட்டது. அதற்கான முதல் தகவல்

அறிக்கை வா.சா.ஆ.21 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் expert opinion க்கு ஆவணங்கள் அனுப்பட்டது. நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக கொடுத்த புகார் உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அந்தஉத்தரவிற்கு எதிராக மேல் முறையீடு செய்யவில்லை. எனக்கும் வாதிக்கும் 1ம்பிரதிவாதி பவர் ரத்து செய்த விவரத்தை 2013 ம் ஆண்டிலே தெரிவித்தும் 2016 ம் ஆண்டுதான் வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நானும் வாதியும் இணைந்து 1ம் பிரதிவாதியை ஏமாற்ற நினைத்து மோசடியான ஆவணங்களை தயாரித்தோம் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இந்த நீதிமன்றததில் இருந்து பரிகாரம் கோர முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்- வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன்படி தள்ளி வைக்கப்பட்டது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu